2 தேர்ச்சி ஒன்று :- இறைவன் மட்டில் நிறை விசுவாச வாழ்வு வாழ்வர்

1.2. இறைவன் எமக்களித்த சுதந்திர வாழ்வு

அழகான மாமரமொன்றில் காய்ந்த இலைகளும், பசுமையான இலைகளும் இருந்தன. அதில் அழகிய பச்சைப் பசேலென இருந்த இலையும் காய்ந்து வறண்ட ஒரு இலையும் நல்ல நண்பர்களாயிருந்தன. ஒரு நாள் அவை இரண்டும் தம்முள் உரையாடிக்கொண்டன.

பசுமையான இலை : ஏன் நண்பனே நீ வாடிப்போய் இருக்கிறாய்? சிறிது நாட்களாக உனது உடல் மஞ்சள் நிறமாக மாறியுள்ளதைப் பார்த்தேன்.

காய்ந்த இலை : வயது போனால் அப்படித்தான் நண்பா இருக்கும். இப்போது எனது காலம் முடிந்து விட்டது. இவ்வளவு காலமும் நான் சுதந்திரமாக எனது தாய் போன்ற இந்த மரத்துடன் இணைந்து வேலை செய்கின்றேன். இப்போது உங்களிடமிருந்து பிரிந்து போக வேண்டும்.

பசுமையான இலை : ஐயோ! எங்களிடமிருந்து பிரிந்து போகாதே!

காய்ந்த இலை : அப்படிக் கூறிவிட முடியாது. எமக்கு இவ்வுலக வாழ்வு ஒரு குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே. நாம் வாழும் வரையும் மற்றவர் எம்மிடம் எதிர்பார்த்ததைச் செய்ய வேண்டும். இதுதான் நமது நோக்கம். எமக்கு சுதந்திரம் உண்டு என்று அதனைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது. நல்லதையே செய்ய வேண்டும்.

பசுமையான இலை மிகவும் துக்கப்பட்டது. அது வளர்ந்த நாளில் இருந்து உலகிலுள்ள நல்லதையும் தீயதையும் சொல்லிக் கொடுத்து சுதந்திரமாக நாம் வாழக் கற்றுத்தந்த நண்பன் என்னை விட்டுப் பிரியப்போகிறான் எனக் கவலையடைந்தது. தன் நண்பர் இத்தனை நாளும் கற்றுத்தந்த நல்ல விடயங்களை அது கடைப்பிடித்தது. இருப்பினும் அதற்கு ஒரு சந்தேகம்.

பசுமையான இலை : நண்பா! சுதந்திரத்தைத் தவறான வழியில் பாவித்த ஒருவன் இறந்தால் அவனுக்கு என்ன நடக்கும்?

காய்ந்த இலை : அதுதான் எனக்குத் தெரியாது. எப்போதாவது உனக்குத் தெரியவரும்.

(அவ்வேளை குரல் கேட்டது. இருவரும் அமைதியானார்கள். அது அந்தத் தாய் மரத்தின் குரல்.)

தாய் மரம் : என்னுடைய பிள்ளைகளே கேளுங்கள்: நாம் சுதந்திரத்தைத் தவறான வழியில் பாவித்தால் எமது வாழ்வு குறைந்துவிடும். நாம் பாவத்தில் விழுவோம். நாம் செய்யும் பாவம் நமக்கு மட்டுமல்ல, மற்றவரையும் துன்புறுத்தும். நாம் பிறந்தது மற்றவர் நன்மைக்கே. இந்தக் காய்ந்த இலையை எண்ணிப் பெருமையடைகிறேன். அது எம்மை விட்டுப் பிரிந்தாலும் அதன் இறப்பு புதிய வாழ்க்கைக்கு வழிவகுக்கும். இயற்கையில் நடைபெறும் இந்தப் பிரிவில் சுதந்திரமும் தியாகமும் இணைந்திருக்கின்றன.

(அந்த சத்தம் நின்றது)

பசுமையான இலைக்கு நன்றாகப் புரிந்து விட்டது. அது காய்ந்த இலையைப் பார்த்தது. அவ்வேளை காய்ந்த இலை கீழே விழுந்தது. பசுமையான இலைக்குத் தன் நண்பனை நினைத்துக் கவலை ஏற்படவில்லை. மாறாக, திரும்பவும் அது மரத்திற்கு பசளையாகப் பயன்படப் போவதை எண்ணி மகிழ்ச்சியடைந்தது. எமக்குத் தரப்பட்ட ஆற்றல்களை மற்றவர்களுக்காகப் பயன்படுத்துவோம். முழுச்சுதந்திரத்துடன் நம்மை பிறர் பணியில் அர்ப்பணிப்போம்.

நினைவிற் கொள்க:

- ஏதேன் தோட்டத்தின் முழு அதிகாரத்தையும் இறைவன் மனிதனுக்கு அளித்தார்.
- மக்களைப் பெற்று பூமியை நிரப்பி அதனை விருத்தி செய்யத் தேவையான ஆசீரை இறைவன் மனிதனுக்கு வழங்கினார்.
- நன்மை தீமையைப் பகுத்தறிந்து அதை அனுபவிக்கும் சுதந்திரத்தையும் விருப்பத்தையும் இறைவன் மனிதனுக்கு அளித்தார்.
- இறைவனுக்கு எதிராக பாவம் கட்டிக்கொள்வதற்குக்கூட மனிதன் தனது சுதந்திரத்தைப் பாவிக்கலாம்.

தொடக்கத்தில்
இறைவனின் அன்புத்திட்டத்தை மதிக்காமல்
இறைவனுக்குக் கீழ்ப்படியாததால் தனக்கு அளிக்கப்பட்ட
சுதந்திரத்தைத் தவறாகப் புரிந்துகொண்டு அதனைத் தவறாகவே
பயன்படுத்தினான். முதல் பாவம் பல பாவங்களுக்கு வழிவகுக்கவே
மனிதன் பாவச் சார்புள்ளவன் ஆனான். சுதந்திரத்தை இவ்வாறு மனிதன் பிழையான
வழியில் பயன்படுத்தியதன் விளைவாக மனித இதயத்தில் பிறந்த தொல்லைகளை
மனித வரலாறு எடுத்துக் கூறுகிறது.
கத்தோலிக்க திருச்சபையின்
மறைக்கல்வி # 1739.